**செ.வெ.எண்: 43** **நாள்: 20.09.2016**

# பத்திரிகைச்செய்தி

இன்று (20.09.2016) மற்றும் 21.07.2016 ஆகிய நாட்களில் தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறுவதாக அனைத்து நாளிதழ்களிலும் ஏற்கெனவே தெரிவிக்கப்பெற்றது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறுவதைக் கருதி குறிப்பிட்ட நாட்களில் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்க நிகழ்வுகளை நடத்த இயலாமல் நிறுத்தி வைக்கப்பெறுகிறது. மேற்படி ஆட்சிமொழிப் பயிலரங்கம் கருத்தரங்கம் உள்ளாட்சித் தேர்தலுக்குப்பின் பிறிதொரு நாளில் நடத்தப் பெறுமென புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்கள்/கண்காணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் இதன் வாயிலாக தெரிவிக்கப்பெறுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**